# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2049/14 - 2017 දෙසැම්බර් මස 12 වැනි අඟහරුවාදා - 2017.12.12

*2049/14 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைப் பொறியியல் சேவை தொடர்பான பிரமாணத்தினை திருத்தியமைத்தல் - திருத்த இலக்கம் (04)**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 1887/21 ஆம் இலக்க மற்றும் 2015, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய 1905/07 ஆம் இலக்க மற்றும் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய 2006/53 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிகளின் மூலம் திருத்தப்பட்ட, 2013, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1836/6 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைப் பொறியியல் சேவை பிரமாணக் குறிப்பின் 20.1, 20.1.1 மற்றும் 20.1.2 ஆம் பிரிவுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

20.1 இவ் இடைக்கால ஏற்பாடுகள் 2006.01.01 ஆந் திகதி முதல் 2017, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாகும். இக்காலப்பகுதியில் பின்வரும் தகைமைகளையும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யும் அலுவலர்களின் தரமுயர்வுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

20.1.1 சேவையின் தரம் II இற்கான தரமுயர்வுகள்

(I) 2008.01.01 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைந்து தரம் III இற்கு உள்வாங்கப்பட்ட அலுவலர் ஒருவர், 1988 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதிய 509/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மற்றும் அதனுடன் தொடர்புடைய திருத்தங்கள் ஊடாக வெளியிடப்பட்ட இலங்கைப் பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சேவையின் வகுப்பு II தரம் II இலிருந்து வகுப்பு II தரம் I இற்கு தரமுயர்வு பெறுவதற்குப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய அனைத்துத் தகைமைகளையும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இடைக்காலத்தில் தரம் II இற்குத் தர முயர்த்தப்படுவர்.

20.1.2 சேவையின் தரம் I இற்கான தரமுயர்வுகள்

(I) 2008.01.01 ஆந் திகதிக்கு முன்னர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு தரம் II இற்கு உள்வாங்கப்பட்ட அல்லது இடைக்காலத்தில் தரம் II இற்கு தரமுயர்த்தப்பட்ட அலுவலர்கள், இடைக்காலத்தில் பின்வரும் தகைமைகளையும் தேவைப்பாடுகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்வார்களாயின், அத்தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரம் I இற்குத் தரமுயர்த்தப்படுவர்.

(அ)உடன் முன்னரான 05 வருடங்களினுள் அனைத்துச் சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் ;

(ஆ)உடன் முன்னரான 05 வருடங்களினுள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருக்கக் கூடாதிருத்தல் ;

(இ) தரம் II இற்கு தரமுயர்வு பெற்ற தினத்திலிருந்து பட்டயப் பொறியியலாளர் தரத்தினைத் தொடர்ச்சியாகப் பேணி வந்திருத்தல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஏ. குலதுங்க,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

*12- 918*